AEPY File UD 281

15

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன்,B.E.,

ந.க.எண்.1731/2020/திருவள்ளூர்- நாள்.28.10.2020.

பொருள்: தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொகுப்பு குடியிருப்பு கட்டிடங்கள் - மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - மப்பேடு ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.1105/3-ல் 35820 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 18 பிளாக்குகளுடன் 1400 குடியிருப்புகள் கொண்ட 51844.95 சமீ கட்டிடப் பரப்பில் கூடுதலாக 328 குடியிருப்புகள் 12038.13 ச.மீ கொண்ட ஐந்தாவது தளத்துடன் கூடிய ஆக மொத்தம் 1728 குடியிருப்புகள் மற்றும் 63883.08 ச.மீ கட்டிட பரப்பளவு கொண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. Executive Engineer, Reconstruction Division, Tamil Nadu Slum Clearance Board, Chennai அவர்களின் கடிதம், Lr.No.889/HD/RCDn/ 2020/ நாள்.25.09.2020.
2. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (யுடி(4)-1), நாள்.04.06.2004.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் செயலாணை கடிதம் எண்.3930/2019/ திவம2,நாள்.13.12.2019.
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செயல்முறை கடிதம் எண். 3461/2019/ அ6.நாள்.31.03.2020.
5. இவ்வலுவலக கடிதம், இதே எண், நாள்.09.10.2020.(நன்னிலை வரி கட்டணம் செலுத்தக் கோரியது).
6. Executive Engineer, Reconstruction Division, Tamil Nadu Slum Clearance Board, Chennai அவர்களின் கடிதம், Lr.No.889/HD/RCDn/ 2020/ நாள்.25.09.2020 (நன்னிலை வரி செலுத்திய விவரம்).
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
8. மனுதாரரின் Online மனு எண்.2019054020321399, நாள்.17.10.2019. மற்றும் e-DCR unique ID No.SCR-21/09/2020 : 201908.
9. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம், ந.க.எண்.11275/2017/என்-1, நாள்.30.09.2019.

*****

**உத்தரவு :**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், மப்பேடு ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.1105/3-ல் 35820 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 18 பிளாக்குகளுடன் 1400 குடியிருப்புகள் கொண்ட 51844.95 சமீ கட்டிடப் பரப்பில் கூடுதலாக 328 குடியிருப்புகள் **12038.13** ச.மீ கொண்ட ஐந்தாவது தளத்துடன் கூடிய ஆக மொத்தம் 1728 குடியிருப்புகள் மற்றும் 63883.08 ச.மீ கட்டிட பரப்பளவு கொண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி கோரி, பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை 6-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி **ரூ.36,000/- (ரூபாய் முப்பத்தி ஆறாயிரம் மட்டும்)**-ஐ செலுத்தியதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

..2..

EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE B[illegible],
T.P. CHATRAM, CHENNAI-10.

**e-DCR unique ID No.SCR-21/09/2020 : 201908 வரைபடத்தின்படி :**

மனையிடத்தின் பரப்பு = 35820 சமீ

**கட்டிடப் பரப்பு :**

| வ.எண் | தளம் வாரியாக | தளப்பரப்பு ( ச.மீ) | குடியிருப்பு விபரம் |
|---|---|---|---|
| 1. | Ground Floor | 591.51 | 16 குடியிருப்புகள் x 6 தளங்கள் x 18 பிளாக்குகள் = 1728 குடியிருப்புகள் |
| 2. | First Floor | 591.51 | |
| 3. | Second Floor | 591.51 | |
| 4. | Third Floor | 591.51 | |
| 5. | Fourth Floor | 591.51 | |
| 6. | Fifth Floor | 591.51 | |
| | **Total** | **3549.06** | |

Single Block = 3549.06 x 18 Blocks = 63883.08 Sq.mt
OSR = 3610 Sq.m.
FSI = 1.77.
PC = 29.53 %.

பார்வை 3-ல் கண்ட செயலாணையில் திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், மப்பேடு ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.1105/3-ல் 35820 சமீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு **'A முதல் O' வரை** என எல்லையிட்டு, **ம.வ/ந.ஊ.உ.இ(திவம).எண்.433/2019** என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையிடத்தில் தரைதளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 18 பிளாக்குகளுடன் 1400 குடியிருப்புகள் கொண்ட 51844.95 சமீ கட்டிடப் பரப்பிற்கு **(க.வ/ந.ஊ.உ இ(திவம)எண்.28(அஆஇ)/2019** என எண்ணிடப்பட்டு ஏற்கனவே தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தற்போது பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்டுள்ள திருத்திய மற்றும் கூடுதலாக 328 குடியிருப்புகள், 12038.13 ச.மீ கொண்ட ஐந்தாவது தளத்துடன் கூடிய ஆக மொத்தம் 1728 குடியிருப்புகள் மற்றும் 63883.08 ச.மீ கட்டிட பரப்பளவு கொண்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய வரியோர் வாழ் தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு **க.வ/ந.ஊ.உ.இ(திவம).எண்.13(அஆ)/2020(இரண்டு தாள்கள்)** என எண்ணிடப்பட்டு பின்வரும் சிறப்பு நிபந்தனை மற்றும் நிபந்தனைகளுடன் திருத்திய வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள் :**

1. உத்தேச மனையிடத்தை ஒட்டி அமையும் சர்வே எண்.1105/4-ல் உள்ள வாய்க்காலினை ஆக்ரமணம் செய்யக்கூடாது. மேலும் அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.
2. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rule made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.



EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE BOARD,
T.P. CHATRAM, CHENNAI-10.

4. மனையிடத்தில் காட்டப்பட்டுள்ள 'A முதல் L வரை' என எல்லையிடப்பட்ட OSR திறவிடம் மற்றும் அதற்கான சாலையினை உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது.

5. பார்வை 5-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில், நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

"சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

6. மத்திய மற்றும் மாநில அரசு பிற துறைகளிடமிருந்து சம்மந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் பெறப்பட வேண்டிய அனுமதிகளை பெற்ற பின்னரே, இந்நிறுவனத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படல் வேண்டும்.

7. தீயணைப்பு துறையின் நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

8. "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில், பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்."

9. "The Provisions in the G.O(Ms).No.17, H & UD (UD4(3)), Department", dated: 05.02.2016, relating to installation and use of solar energy system, should be followed.

10. மேற்படி மனை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள OSR திறவெளி இடத்தில் கட்டிடங்கள் ஏதும் கட்டப்படாமல் வேறு எந்த உபயோகமும் மேற்கொள்ளப்படாமல் காலியாக இருத்தல் வேண்டும்.

**<u>நிபந்தனைகள் :</u>**

1. உத்தேச **தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொகுப்பு குடியிருப்பு** கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு, வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE BOARD,
T.P. CHATRAM, CHENNAI-10.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்ற செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால், இவ்வலுவலகத்தின் மு அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.13 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில், விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1)துறை, நாள்.03.11.2004-ன்படி, செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி, உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சட்டம், 1974 பிரிவு 25 (Water act)-ன்படி, மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13. 1997-ம் ஆண்டின் ஊராட்சி கட்டிட விதிகள் நிறைவு செய்யும் வகையில் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
14. உத்தேச கட்டிட இடத்தினை சுற்றிலும் நிழல்தரும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும்.
15. Tamil Nadu Combined Development & Building Rules '2019-ஐ நிறைவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
16. மனையின் ஊடே செல்லும், உயர்மின் அழுத்த கம்பி ( H.T. Line) பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் . மற்றும் வரைபடங்கள் இத்துடன் இரண்டு தொகுப்புகள் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு, கட்டுமான வரைபடங்களுக்கு இறுதி ஒப்புதல் பெற, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE BOARD,
T.P. CHATRAM, CHENNAI-10.

மேலும், ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை, இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

28/10/2

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்.

28-10-2020

**இணைப்பு :**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் (2x2-04) தொகுப்பு.

**பெறுநர் :**
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**நகல் :**
Executive Engineer..
Reconstruction Division,
Tamil Nadu Slum Clearance Board,
T.P.Chatram, Chennai - 600 010.

EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE BOARD,
T.P. CHATRAM, CHENNAI-10.

CT PLS No.



# ஊராட்சி மன்றத் தலைவர் நடவடிக்கைகள்

கட்டிட பிளான் (வரைபடம்) அங்கீகாரம் படிவம்

முன்னிலை : R. சித்ரைதய்ய ஜெகதீசன்

கட்டிட அனுமதி எண் : ந.க. 2020 / 2021 நாள் : 23 / 4 / 2021

பொருள் : கட்டடங்கள் வரைபடங்கள் - ச.எண் 1105/3ல் குடியிருப்பு மனை / ~~தொழிற்சாலை கட்டுதல்~~ - அனுமதி வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1) அரசாணை எண் 255 / ஊ.வ.துறை நாள் : 18-8-97

2) ஊராட்சி தீர்மானம் எண் 60 / 12.03.2020 /நாள்

3) விண்ணப்பதாரின் மனு நாள் :

— — — — —

**உத்திரவு**

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் மப்பேடு ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண் 1105/3 ல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டபடி 6,87,381.49சதுர அடி பரப்பளவுள்ள குடியிருப்பு மனை / ~~தொழில் மனை கட்டிடம்~~ கட்டிக் கொள்ள திரு./திருமதி Exective Engineer, Tamil nadu Slum Clearance Board Reconstruction Division என்பவருக்கு உரிமம் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. கட்டிடம் கட்டுவது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு அதிகமாகவோ அல்லது மாறுபட்டோ இருக்கக்கூடாது.
2. உபயோகிக்கும் நீர் எவ்விதத்திலும் தேங்காதவாறு வசதிகள் செய்யப்பட வேண்டும்.
3. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் வேறு காரணத்திற்கு கட்டிடம் உபயோகப்படுத்தக்கூடாது.
4. மனையின் எல்லைப் பகுதி கட்டிடம் பரப்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் உயர்மட்டத்தில் இருந்து 5 அடி அல்லது 1.52 மீட்டர் உயரத்திற்குட்பட்ட சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர எவ்வித கட்டிட சுவரோ கட்டக்கூடாது.
5. ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் எல்லைப் பகுதிக்கும் இடையே குறைந்தது 5 அடி அல்லது 1.82 மீட்டர் அளவு திறந்தவெளிவிடப்பட வேண்டும்.
6. மனையில் திறந்தவெளி இருக்கும் பகுதியில் சுகாதாரத்துடன் திறந்த வெளியில் பேணப்பட வேண்டும்.
7. கடைக்கால் தோண்டவும், நிலத்தை சமன்படுத்தவும் தவிர வேறு காரணங்களுக்காக மனையில் திறந்த வெளியில் குழிகள் தோண்டவோ, பள்ளங்கள் ஏற்படுத்தவோ கூடாது.
8. மனையின் முன்புறத்தில் அல்லது பின்புறத்தில் ஏதாவது மரம் நட்டு பேணி காக்க வேண்டும்.
9. அனுமதிக்கப்பட்ட கால வரையானது இவ்வுத்திரவு இடப்படும் தேதியில் இது 12 மாதங்கள் ஆகும். அதற்குள் கட்டி முடிக்கப்படாவிட்டால் உரிய கட்டணத்தில் ஐந்தில் ஒரு பாகம் அல்லது ஊராட்சியில் விதிக்கும் தொகையினை செலுத்தி புதிதாக மனு செய்து காலத்தில் நடத்த அனுமதி பெற வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் மாறுதல் தேவைப்படின் உரிமை அமுல் இருக்கும் காலத்திற்குள் புதிய வரைபடம் தயாரித்து ஒப்படைத்து புதிய அனுமதி பெற வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கட்டிடம் கட்டப்படும் வரை, கட்டிடம் மனையின் வரைப்படம் வைக்கப்பட்டு பார்வையிடும் அதிகாரிகள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.
12. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ அல்லது ஊராட்சியாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்ட வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.
13. கட்டிடம் கட்டப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவருக்கு உடனடியாக முடிக்கப்பட்ட தேதி, கட்டிட உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தேதி கட்டிடம் கட்ட ஏற்பட்ட செலவினம் முதலியவற்றை தெரிவித்து உரிமையாளர் கட்டிடம் வரிவிதிப்பதற்கு உட்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
14. கட்டித்தில் தீ விபத்து ஏற்படாதவாறு பாதுகாப்பு செய்வதிலும் சுற்றுப்புற சூழ்நிலை சுகாதாரத்திலும் பேணி காப்பது உரிமையாளர்களின் கடமையாகும்.
15. கட்டிட உரிமம் வழங்கப்பட்ட / அனுமதிக்கப்பட்ட கட்டிடம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக பிற்காலத்தில் அறியப்பட்டாலோ அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகைகளை செலுத்த வேண்டியது உரிமையாளருடைய பொறுப்பாகும்.
16. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது பூராவும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டோ கட்டிடம் கட்டப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.
17. வரைபட அங்கீகாரம் 1997ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் தமிழ்நாடு ஊர்கள் மற்றும் நகரமைப்பு சட்டம்.
18. மழைநீர் சேமிப்பு வடிகால் அமைத்தல் வேண்டும்.
19. மேற்கான விதிகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

பெறுபவர் :

திரு./திருமதி Exective Engineer
Reconstruction Division
Tamil nadu Slum Clearance Board, T.P. Chatram
Chennai - 600010

தலைவர்

ஊராட்சி

EXECUTIVE ENGINEER,
RECONSTRUCTION DIVISION,
TAMILNADU SLUM CLEARANCE BOARD,
T.P. CHATRAM, CHENNAI-10.